குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.158/2024

அ.சா.1

2025–ம் ஆண்டு ஜீன் 17–ம் தேதி செவ்வாய்கிழமை அரசு தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பால்ராஜ் | தொழில் | |
| தந்தை பெயர் | பழனிசாமி | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மாலை 06.03 மணி,

Accused Mariyappan @ Meenkara Mariayappan present. Advocte Mr.I.Jayakumar present for accused. APP Mr.M.Suresh Present.

**முதல் விசாரணை :**

1. நான் ஓமலூர் பிருந்தாவன் நகர் 8 வது வீதியில் குடியிருக்கிறேன். எனது வீட்டில் இரண்டு தளங்கள் உள்ளது. நான் வீட்டின் மேல் தளத்தில் குடியிருந்து வருகிறேன். வீட்டின் கீழ் தளத்தில் தில்லைக்கரசி என்பவர் குடியிருந்து வருகிறார். அவர் அரசு பள்ளி ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார். கடந்த 05.05.2024 ஆம் தேதி இரவு 02.00 மணியளவில் தில்லைக்கரசி குடியிருக்கும் வீட்டின் வாசக்கதவின் முன்பாக உள்ள கிரில் கதவு உடைக்கப்பட்டு அதன் பின்னால் உள்ள மெயின் மரக்கதவு உடைக்கப்படும் சத்தம் கேட்டு, வந்து பார்த்தேன். ஒரு நபர் வீட்டின் உள்ளே சென்று வீட்டின் உள்ளே இருந்த பீரோவை திறக்க முயன்ற போது, நான் சென்று பார்த்தேன்.

2. என்னை பார்த்தவுடன் அந்த நபர் என்னை தள்ளிவிட்டு, அங்கிருந்து வெளியில் ஓடிவிட்டார். வீட்டின் பின்பக்க காம்பவுண்ட் சுவரை எகிறி குதித்து அந்த நபர் ஓடிவிட்டார். நான் சத்தம் போட்டவுடன் அக்கம் பக்கம் இருந்தவர்கள் வந்துவிட்டார்கள். பின்பு சம்பவம் குறித்து தில்லைக்கரசிக்கு தகவல் சொன்னேன். பின்பு காவல் நிலையத்திற்கு சென்று இதுசம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார்

S SHARMILA Digitally signed by S SHARMILA Date: 2025.06.17 18:57:31 +0530

அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது. ( **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

3. சம்பவத்தில் ஈடுபட்ட நபர் முகத்தை முகக்கவசம் போட்டு மறைத்திருந்தார். அவரது தலைமுடி நரைத்திருந்தது. போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

4. சம்பவம் நடந்த மறுநாள் காலை 10.00 மணிக்கு நான் புகார் கொடுத்தேன். சம்பவம் நடந்தபோதே, அவசர எண். 100 க்கு தகவல் கொடுத்தேன். போலிசார் இரவு 03.00 மணிக்கு எனது வீட்டிற்கு வந்துவிட்டார்கள். போலிசார் எனது வீட்டிற்கு வந்து புகார் கேட்டதால் தான் நான் எழுதி கொடுத்தேன் என்றால் இல்லை. அன்றைய தினம் எனது வீட்டிற்கு வந்த போலிசாரின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது.

5. இவ்வழக்கு புகாரை கொடுத்த பின்பு, சுமார் ஒருவாரம் 10 – 15 காவலர்கள் வந்தார்கள். அவர்கள் என்னை விசாரித்தார்கள். போலிசார் எனது வீட்டிலிருந்து கைரேகைகளை பதிவுகளை எடுத்துக்கொண்டார்கள் என்றால் சரி. எனது வீட்டில் திருடவந்தவர்க் உடைத்த பூட்டை போலிசார் கைப்பற்றினார்களா என்றால் இல்லை. எனது வீட்டில் போலிசார் மோப்ப நாய் மூலமாக ஆய்வு செய்தார்களா என்றால் இல்லை.

6. சம்பவம் நடந்த வீட்டில் வாடகைக்கு இருந்த தில்லைக்கரசி தகவல் தெரிந்து மறுநாள் வீட்டிற்கு வந்தார். இவ்வழக்கு சம்பவம் குறித்து, அவர் புகார் மனு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரி. நான் சொல்வதுபோல் சொன்ன இடத்தில் சொன்ன தேதியில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், தில்லைக்கரசி எனது வீட்டில் வாடகைக்கு இருப்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் எனக்கு புகார் கொடுத்த தேதி நினைவில் இல்லை என்றால் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம் : மாலை 06.19 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.06.17 18:57:34 +0530